ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2274/15 - 2022 අප්‍රේල් මස 06 වැනි බදාදා - 2022.04.06

*2274/15 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி புதன்கிமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**21 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, இலங்கை, றுகுணு பல்கலைக்கழகத்தினைத் தாபிக்கின்றதும் (காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 1984, சனவரி 24 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, (2018 யூலை 9 ஆந்தேதிய 2079/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அத்தகைய அட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததான அவ்வட்டவணையில் நிரல்* II *இல் காணப்படுகின்ற "9. ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

*"10 தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/1


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

### *21 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, இலங்கை, ரஜரட்ட பல்கலைக்கழத்தைத் தாபிக்கின்றதும் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறானதுமான) 1995 நவம்பர் 7 ஆந்திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, (2019 மார்ச் 18 ஆந் தேதிய 2115/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாக அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற "7. பொருளியல் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

*"8 தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/2

---

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

### *21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும், துறைகளையும் குறித்துரைக்கின்றதுமான (2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதிய 2163/21 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 1518/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "கலைப் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாக அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற "17. மொழிபெயர்ப்பு கற்கைகள் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

*"18. தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/3

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**21 ஆம் மற்றும் 139 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்றதான இலங்கை களனிப் பல்கலைக்கழக பீடங்களையும், துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 2006 யூலை 22 ஆந் திகதிய 1454/37 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, (2017 யூன் 14 ஆந் தேதிய 2023/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "சமூக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "12. அரசியல் விஞ்ஞானங்கள் துறை" என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினை சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

*"13 தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/4

---

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**21 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, இலங்கை, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், 2022 ஒற்றோபர் 28 ஆந் திகதிய 2199/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "சுதேச சமூக விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைக் கற்கைகள் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததான அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "முகாமைக் கற்கைகள் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

*" தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/5

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**21 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27 (1) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தினை தாபிக்கின்றதும், (காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும்), 1995 நவம்பர் 07 ஆந்திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, (2015 பெப்புருவரி 27 ஆந் தேதிய 1903/63 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "5. புவியியல் மற்றும் சூழல் முகாமைத்துவத் துறை" என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

*" 6. தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/6

---

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**22 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட்ட 27 (1) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கெண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மேல், (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆந் திகதிய 1187/15 ஆம் இலக்க, அதிவிடே வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தை தாபிப்பது தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் அட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற " தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற வணிகம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

*" தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு.
*2022 ஏப்பிறல், 01*

EOG 04 - 0034/7

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*